சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

Case No.OS. 20/2025 PW1

**2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 2 ம் நாள் திங்கட்கிழமை**

வாதித்தரப்பு சாட்சியாகிய வா.சா.1 இன் வாக்குமூலம் ஆக்ட் 10/1873 ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.ஆர்.இளவரசி, எழுத்தர் நிலை-II என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கனிமொழி | தொழில் | வீட்டு குடித்தனம் |
| கணவர் பெயர் | டில்லிபாபு | ஜாதி | |
| கிராமம் | அக்ரபாளையம் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | 37 |

## 02.03.2026 முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறன். ஆதார் அட்டை நகல் அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது. பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றி முழு விவரம் எனக்கு தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக,

24.02.1997 ம் தேதியிட்ட கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. வாதியின் தாயார் மகாராணியின் இறப்பு சான்று இணைய நகல் **வா.சா.அ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதியின் தந்தை மணி என்பவரின் இறப்பு சான்று இணைய நகல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. வாதியின் தந்தை மணி என்பவரின் வாரிசு சான்று இணைய நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. தாவா சொத்திற்கான வில்லங்க சான்று இணைய நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. வாதியின் ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

**(வாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**